**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்**
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
*******

**ஆணை எண். 203/ந/2019**
**நாள். 24.03.2022**

திரு. K. தமிழ்செல்வகுமார்,
இராஜபாளையம். – முறையீட்டு மனுதாரர்

ஆணையாளர்,
இராஜபாளையம் நகராட்சி. – எதிர்மனுதாரர்

விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் வட்டம், கிழவிகுளம் அஞ்சல், தெற்கு தெரு, நெம்பர். 39 என்ற முகவரியில் வசிக்கும் திரு. K. தமிழ்செல்வகுமார் என்பவரது 04.12.2019 நாளிட்ட முறையீட்டு மனு 06.12.2019 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு 203/2019 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது.

முறையீட்டு மனுதாரரின் மனு, ஆணையரின் வாக்குமூலம் அவர் அளித்த அறிக்கை மற்றும் ஆவணங்கள் கவனமாக பரிசீலிக்கப்பட்டு கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் வட்டம், கிழவிகுளம் அஞ்சல், தெற்கு தெரு, நெம்பர். 39 என்ற முகவரியில் வசிக்கும் திரு. K. தமிழ்செல்வகுமார் என்பவர் தமது மனுவில்:-

"திரு.P.இராஜேந்திரன் உதவியாளர், இராஜபாளையம் நகராட்சியில் பணிபுரிந்து கொண்டு முறைகேடாக கோடிக்கணக்கில் சேர்த்த சொத்துக்களில் 10 ஆவண நகல் தங்களிடம் சமர்ப்பிக்கிறேன்.

அரசு ஊழியர் ரூபாய். 20 ஆயிரத்துக்கு மேற்பட்ட சொத்துக்களை வாங்கினால் சர்வீஸ் ரிஜிஸ்டரில் பதிய வேண்டும். (Service Register) ஆனால் இதுவரை பதியப்படவில்லை. தன் மனைவி இராமலட்சுமி மகள் ஜோதிப்பரியா தந்தை ராமர், தாயார் பத்திரகாளி ஆகியோர் பெயரில் வாங்கிய சொத்துக்கள் இதுவரை பதியப்படவில்லை. ஏனென்று கேட்டால் நகராட்சி நிர்வாகத்திடம் இருந்து எந்த பதிலும் இல்லை. நீங்கள் சம்மந்தப்பட்ட அதிகாரிகளை விசாரித்து

தெரிந்து கொள்ளலாம். இவர் வருவாய் உதவியாளராக இருக்கும் போது இவரது வீட்டிற்கான தீர்வை அனைத்தும் காலி இடத்திற்கான தீர்வை மதிப்பீட்டை போட்டு கட்டி வருகிறார். அதற்கான ஆதார நகலை தெரிந்து கொள்ளலாம். இவ்வாறு அரசிற்கு வருவாய் இழப்பீட்டை ஏற்படுத்தி உள்ளார். இது சம்மந்தமான அதிகாரிகளை விசாரித்து தெரிந்து கொள்ளலாம். எனவே இது சம்மந்தமான சட்டப்படியும், நியாயப்படியும் விசாரணை நடத்துமாறு மனுதாரர் கேட்டுக் கொண்டுள்ளார்''.

2. முறையீட்டு மனுதாரர் மனு மீது விரிவான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற 03.11.2021 நாளிட்ட கடிதத்தின் மூலம் இராஜபாளையம் நகராட்சி ஆணையருக்கு அறிவுறுத்தப்பட்டது. ஆணையர் 11.11.2021 நாளிட்ட தனது அறிக்கையை கீழ்காணுமாறு தாக்கல் செய்துள்ளார்:

"திரு.தமிழ்செல்வகுமார் என்பவர் கொடுத்த புகாரில் திரு. P.இராஜேந்திரன் என்பவரின் குடும்ப உறுப்பினர்களின் சொத்துக்கள் 10 ஆவணங்கள் என குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் திரு.P.இராஜேந்திரன் என்பவரின் குடும்ப உறுப்பினர்களின் சொத்துக்கள் விபரங்கள் பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்படவில்லை. மேற்படி பதிவு செய்யப்படாதது குறித்து அன்னாரிடம் இவ்வலுவலக விளக்கம் கோரும் குறிப்பாணையில் 7 தினங்களுக்குள் உரிய விளக்கம் கோரப்பட்டது. அன்னார் விளக்கம் சமர்ப்பிக்க 15 தினங்கள் கால அவகாசம் கோரினார். ஆனால் 15 தினங்கள் அவகாசத்திற்கு பின்னரும் உரிய விளக்கம் சமர்ப்பிக்கப்படவில்லை. எனவே, இது குறித்து 24 மணி நேரத்திற்குள் விளக்கம் சமர்ப்பிக்க தெரிவிக்கப்பட்டது. எனவே அன்னாரின் பணிப்பதிவேட்டில் சொத்து விபரம் பதிவு செய்யப்படவில்லை.

மேலும் புகார் மனுவில் குறிப்பிட்டுள்ளபடி திரு. P. இராஜேந்திரன் என்பவரின் குடும்ப உறுப்பினர்களின் சொத்துக்கள் 10 எண்ணிக்கை என குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் தந்தை ராமர், தாயார் பத்திரகாளி என்பவர்கள் அன்னாரின் குடும்ப உறுப்பினர்கள் இல்லை.

மேற்படி அன்னாரின் குடும்ப சொத்துகள் 7 எண்ணிக்கையாகும். மேற்படி சொத்துக்களுக்கு இந்நகராட்சி வருவாய் அலுவலர் திரு.மு.முத்துசெல்வகுமார் என்பவரால் தலஆய்வு செய்து மேற்படி சொத்துக்களுக்கு 31.03.2022 வரை ரூ.1,02,109/- சொத்துவரி நிர்ணயம் செய்து அன்னாருக்கு கேட்பு அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது. அன்னாரால் இதுநாள்வரை மேற்படி சொத்துக்களுக்கு சொத்துவரி செலுத்தப்படவில்லை என்ற விபரம் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

3. இம்முறைமன்ற 03.11.2021 நாளிட்ட அழைப்பாணை மூலம் 12.11.2021 அன்று கன்னியாகுமாரி முகாமில் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு மனுதாரர் மற்றும் இராஜபாளையம் நகராட்சி ஆணையருக்கு ஆணையிடப்பட்டது. ஆணையர் 12.11.2021 அன்று விசாரணைக்கு ஆஜராகி கீழ்காணுமாறு தன் வாக்குமூலத்தை சமர்பித்துள்ளார்:-

"மனுதாரர் திரு.தமிழ்செல்வகுமார் என்பவர் அளித்துள்ள மனுவில் குறிப்பிட்டுள்ள திரு. P. இராஜேந்திரன் என்பவரின் சொத்துக்கள் பற்றிய விவரம் அலுவலக பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்படாததால், அது குறித்து திரு. P. இராஜேந்திரனிடம் விளக்கம் கோரப்பட்டு தற்போது வரை மேற்கண்ட விவரம் எங்களால் பெறப்படவில்லை என்கின்ற விவரத்தை தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் சொத்துக்கள் குறித்த விவரங்களை பணிப்பதிவேட்டில் பதிவு செய்யாததன் காரணமான திரு. P. இராஜேந்திரன் என்பவரின் மீது குற்றச்சாட்டு நடவடிக்கைகள் ந.க.எண்.5469/19/s த.ந.ப (ஒ.மு) மேல்முறையீடு விதி 8 (2)ன் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் அவை தற்போது நிலுவையில் உள்ளது என்கின்ற விவரத்தையும் இம்முறை மன்றத்தில் தெரிவித்துள்ளார்".

மேற்கண்ட விவரம் தொடர்பாக எனது 11.11.2021 நாளிட்ட விளக்கத்தையும், மேலும் இந்நேர்வு தொடர்பான ஆவணங்களின் நகலினையும் இம்முறை மன்றத்தில் சமர்பிக்கிறேன் என தெரிவித்துள்ளார். 12.11.2021 அன்றைய நேரடி விசாரணைக்கு மனுதாரர் ஆஜராகவில்லை''.

4. இந்நேர்வில் மனுதாரது மனு, ஆணையரின் வாக்குமூலம் ஆணையரின் அறிக்கை மற்றும் அவர் அளித்த ஆதார ஆவணங்கள் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டன.

"இராஜபாளையம் நகராட்சியில் உதவியாளராக பணிபுரியும் திரு.P.இராஜேந்திரனின் குடும்ப உறுப்பினர்களின் பெயர்களில் உள்ள சொத்துக்கள் பணிபதிவேட்டில் பதியப்படவில்லை என்பதால் அதுகுறித்து விளக்கம் கேட்கப்பட்ட குறிப்பாணைக்கு திரு. P.இராஜேந்திரனால் இதுவரை விளக்கம் சமர்ப்பிக்கப்படவில்லை என்பது விசாரணையில் தெரியவருகிறது.

எனவே, அன்னாரிடமிருந்து உரிய விளக்கம் பெறப்படாததால் திரு.P.இராஜேந்திரன் அவர்களுக்கு ந.க.எண்.5469/2019/S த.ந.ப (ஒ.மு) மேல்முறையீட்டு விதி 8 (2)ன்படி குற்றச்சாட்டு நடவடிக்கைகள் ஆணையரால் வழங்கப்பட்டுள்ளது விசாரணையில் தெரியவருகிறது.

மேற்படி சொத்துக்கள் வருவாய் அலுவலரால் தலஆய்வு செய்யப்பட்டு அன்னாரின் குடும்ப சொத்துக்கள் ஏழு எண்ணிக்கைக்கு சொத்துவரி நிர்ணயம் செய்து கேட்பு அறிவிப்பு அனுப்பப்பட்டதன் மூலம் அன்னாரின் குடும்ப உறுப்பினர்களின் பெயர்களில் சொத்துக்கள் உள்ளன என்பது ஊர்ஜிதமாகிறது. இதன்மூலம் திரு.P.இராஜேந்திரன் அரசு அலுவலர்களுக்கான விதிமுறைகளை மீறி செயல்பட்டுள்ளார் என்பது தெளிவாகிறது.

எனவே, திரு.P.இராஜேந்திரன் என்பவரின் குற்றச்சாட்டு நடவடிக்கைகள் ந.க.எண்.5469/2019/S த.ந.ப (ஒ.மு) மேல்முறையீட்டு விதி 8 (2)ன்கீழ் வழங்கப்பட்டுள்ள குற்றச்சாட்டு நடவடிக்கைகளுக்கு விசாரணை அலுவலரை நியமித்து உரிய முறையில் விசாரணை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு பரிந்துரைசெய்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது''.

It is seen that the DMA has already launched disciplinary action proceedings against the delinquent official involved in the petition. The DMA is instructed to pursue the matter to its logical end and impose punishments of a severe degree if the charges are held proved. The delinquent should not be allowed to drag on the case endlessly as a notorious ploy resorted to by such delinquent officials in order to weaken the case and escape from the clutches of Law and impartial administration. This should send the right signals in the minds of all Government officials of the area that the wheels of justice grind slowly but surely. Otherwise the administration system will collapse sadly.

2022 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 24-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. K. தமிழ்செல்வகுமார்,
39, தெற்கு தெரு, கிழவிகுளம் அஞ்சல்,
இராஜபாளையம் வட்டம்,
இராஜபாளையம் - 626 139.

2) ஆணையாளர்,
இராஜபாளையம் நகராட்சி,
இராஜபாளையம்.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
நெ.75, சாந்தோம் மெயின் ரோடு,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
நெ.75, சாந்தோம் மெயின் ரோடு,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

நகல்

முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி/ அனுப்பப்படுகிறது//

செயலாளர்.